RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 120 | மே.6, 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5







## சகாயம் ஐஏஎஸ்க்கு சிறப்பு பாதுகாப்பு தர வேண்டும்: தமிழக அரசுக்கு சீமான் கோரிக்கை

சென்னை: மே.6-

உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் சகாயம் ஐஏஎஸ்க்கு சிறப்புப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என தமிழக அரசுக்கு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: சகாயம் ஐஏஎஸ், மதுரை மாவட்ட முன்னாள் ஆட்சியராக பணியாற்றியபோது தொழில்துறை செயலருக்கு எழுதிய கடிதத்தின் வழியே, 2012 ம் ஆண்டில் மிகப்பெரிய கிரானைட் ஊழலை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தார்.

அதில் மதுரை மாவட்டத்தில் இயங்கும் பல கருங்கல் குவாரிகள் ரூ.16 ஆயிரம் கோடி அளவுக்கு அரசுக்கு இழப்பை ஏற்படுத்தியதாக குற்றம்சாட்டியிருந்தார். அதைத்தொடர்ந்து கிரானைட் மற்றும் கனிம மணற்கொள்ளை பற்றி விசாரிக்க சகாயம் தலைமையில் விசாரணைக்குழு அமைத்து சென்னை உயர் நீதிமன்றம் 2014 ல் உத்தரவிட்டது.



இதற்கிடையே கடந்த 2013ம் ஆண்டு சகாயம் ஐஏஎஸ், தன்னை கொலை செய்யப்போவதாக மிரட்டல்கள் வருவது குறித்து தமிழக அரசின் தலைமை செயலரை சந்தித்து முறையிட்ட நிலையில், அவருக்கு ஆயுதமேந்திய தனிப்படையை பாதுகாப்புக்கு உயர் நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இந்நிலையில் திமுக அரசு 2023ம் ஆண்டு அதை தன்னிச்சையாகத் திரும்ப பெற்றுக்கொண்டது. தற்போது 2014 ல் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு அறிக்கையை தாக்கல் செய்வது தொடர்பாக கடந்த பிப்ரவரி மாதத்தில் நீதிமன்ற அழைப்பாணை வந்த நிலையில், அண்மைக்கால அச்சுறுல்களின் காரணமாக நேரில் செல்ல மறுத்திருக்கிறார் சகாயம்.


வளக்கொள்ளையை தடுக்க போராடிய சமூக ஆர்வலர் ஜெகபர் அலி, நெல்லை காவல்துறை அதிகாரி ஜாகிர் உசேன் போன்றவர்கள் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவங்களை கண்ட பின்னரே, விசாரணைக் குழுவின் பதிலைத் தாக்கல் செய்வதற்கு சகாயம் தயக்கம் காட்டியிருக்கிறார்.

சகாயத்தின் உயிருக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் சமூக விரோதிகள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவருக்கு சிறப்பு பாதுகாப்பை அரசு உடனடியாக வழங்க வேண்டும். இவ்வாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பஹல்காம் தாக்குதல் எதிரொலி : பாக்லிஹார் அணையிலிருந்து பாக். செல்லும் தண்ணீர் நிறுத்தம்

புதுடெல்லி: மே.6-

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை அடுத்து சிந்து நதியில் இருந்து பாகிஸ்தானுக்குச் செல்லும் தண்ணீர் நிறுத்தப்படும் என மத்திய அரசு அறிவித்த நிலையில், செனாப் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாக்லிஹார் அணையில் இருந்து பாகிஸ்தானுக்குச் செல்லும் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது.



பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தானுக்கு எதிராக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, இந்தியாவில் இருந்து பாகிஸ்தானுக்குள் சிந்து நதி நீர் தடையின்றி செல்வதற்காக இரு நாடுகளுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சிந்து நதியின் ஒரு பகுதியான செனாப் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாக்லிஹார் அணையின் மதகுகள் மூடப்பட்டதால் அந்த ஆற்றின் வழியாக பாகிஸ்தானுக்கு தண்ணீர் பாய்வது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், செனாப் நதியின் வழித்தடம் நீரின்றி காய்ந்து காணப்படுகிறது.

மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு ஜம்மு காஷ்மீர் மக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். ரியாசி என்ற பகுதியைச் சேர்ந்த உள்ளூர்வாசி ஒருவர் கூறுகையில், “இது மிகப் பெரிய சாதனை. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை மிகவும் நல்லது. நமது அரசாங்கம் பாகிஸ்தானுக்கு பல வழிகளில் தகுந்த பதிலடி கொடுத்து வருகிறது. நாங்கள் அனைவரும் அரசாங்கத்துடன் இருக்கிறோம்.” என்று தெரிவித்துள்ளார்.

தினேஷ் என்ற மற்றொரு உள்ளூர்வாசி, “பாகிஸ்தானுக்கு தண்ணீர் செல்வதை அரசாங்கம் நிறுத்தியதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பாகிஸ்தானின் பஹல்காமில் நமது சுற்றுலாப் பயணிகளைக் கொன்றதற்காக தகுந்த பதிலடி கொடுக்கப்பட வேண்டும். அரசு எடுக்கும் முடிவு எதுவாக இருந்தாலும் நாங்கள் அரசாங்கத்துடன் இருக்கிறோம்.” என்று தெரிவித்துள்ளார்.

ஜீலம் நதியிலிருந்தும் நிறுத்தம்..

இதேபோல், ஜீலம் நதியில் உள்ள கிஷன்கங்கா அணையில் இருந்தும் பாகிஸ்தானுக்கு தண்ணீர் செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனிடையே, டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ஜமியத் உலமாஇஹிந்த்ன் தலைவர் அர்ஷத் மதானி, சிந்து நதி நீர் நிறுத்தத்துக்கு அதிருப்தி தெரிவித்துள்ளார். “யாராவது தண்ணீரை நிறுத்தினால், அதை நிறுத்தட்டும். இந்த ஆறுகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஓடிக்கொண்டிருக்கின்றன, அவற்றின் தண்ணீரை எங்கே கொண்டு செல்வீர்கள்? இது எளிதானது அல்ல. வெறுப்பின் ஆட்சியாக அல்லாமல், அன்பின் ஆட்சியாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நான் ஒரு முஸ்லிம், நான் இந்த நாட்டில் வாழ்கிறேன். ஆனால், இங்கு ஊக்குவிக்கப்படும் விஷயங்கள் நாட்டிற்கு ஏற்றவை அல்ல என்பதை நான் அறிவேன்” என்று தெரிவித்துள்ளார்.

ஜமியத் உலமாஇஹிந்த் தலைவர் அர்ஷத் மதானியின் கருத்துக்கு பாஜக கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் சையத் ஷாநவாஸ் உசேன், “இந்த அறிக்கையை நான் கண்டிக்கிறேன். இது மிகவும் ஆட்சேபனைக்குரிய அறிக்கை. பாகிஸ்தான் இரத்தக் குளியல் செய்யலாம், நாம் அவர்களுக்கான தண்ணீரைக் கூட நிறுத்தக் கூடாதா? இது என்ன மாதிரியான அறிவுரை? போர் கூடாது என்று அவர் கூறுகிறார்... ஜமியத் உலமாஇஹிந்த் வெளியிட்ட அறிக்கைக்காக அந்த அமைப்பின் மீது முஸ்லிம் சமூகத்தினரிடையேயும் கோபம் உள்ளது.” என்று தெரிவித்துள்ளார்.

## கோடை வெயிலின் தாக்கத்தில் இருந்து பக்தர்களை காக்க கோயில்களில் கீற்று பந்தல், பிரகாரங்களில் தேங்காய் நார் விரிப்புகள்

சென்னை: மே.6-

கோடை வெயிலின் தாக்கத்தில் இருந்து பக்தர்களை காக்க கோயில்களில் கீற்று பந்தல், தேங்காய் நார் விரிப்புகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.



சென்னை பழைய வண்ணாரப்பேட்டை கோதண்டராமர் கோயிலில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

திமுக ஆட்சிக்கு வந்ததில் இருந்து இதுவரை 2,911 கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இன்றையதினம் மட்டும் 31 கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. வரும் ஜூலை மாதத்துக்குள் 3,000 கும்பாபிஷேகங்களை நிச்சயம் எட்டுவோம். மேலும், இதுவரை கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,665.61 கோடி மதிப்பிலான 7,546.33 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

மாநில வல்லுநர் குழுவால் 11,808 கோயில்களுக்கு திருப்பணி அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக கடந்த 4 ஆண்டுகளில் ரூ.5,917.11 கோடி மதிப்பிலான 25,150 திருப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரலாற்றிலே இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலைத்துறையின் கோயில்களுக்கு உபயதாரர்கள் ரூ. 1,323.77 கோடி மதிப்பிலான 10,414 திருப்பணிகளை செய்து தந்துள்ளனர்.

குறிப்பாக, 459 பெருமாள் கோயில்கள், 42 ஆஞ்சநேயர் கோயில்கள், 41 கிருஷ்ணர் கோயில்கள், 28 ராமர் கோயில்கள் என 570 வைணவ கோயில்களுக்கு இதுவரையில் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. ஒரு ராமர் கோயிலுக்கே கொண்டாட்டம் போடுகின்ற காலங்களில் 28 ராமர் கோயில்களுக்கு கும்பாபிஷேகங்களை நடத்தியுள்ளோம்.

கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பக்தர்களை காத்திடும் வகையில் கோயில்களில் தற்காலிக கீற்றுப் பந்தல்கள் அமைத்தல், கோயில் பிரகாரங்களின் நடைபாதைகளில் தேங்காய் நார் விரிப்புகள், வெப்பத்தை தடுக்கின்ற வெள்ளை நிற பெயிண்ட் அடித்தல், நடைபாதைகளில் வெப்பத்தை குறைத்திடும் வகையில் அவ்வபோது தண்ணீர் பீச்சி அடிப்பதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், ஒரு சில இடங்களில் நீர்மோர், எலுமிச்சை பானகம் போன்றவை வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



■ மதுரை மாநகரில் சித்திரை திருவிழா நடைபெறுவதையொட்டி கள்ளழகர் எழுந்தருளும் வைகை வடகரை ஆழ்வார்புரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகளை மேயர் இந்திராணி பொன்வசந்த் , மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள.சங்கீதா, , ஆணையாளர் சித்ரா விஜயன், , காவல் ஆணையர் லோகநாதன், இ.கா.ப. ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர் அருகில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## கொலை சதி நடந்ததாக பொய்த் தகவல்: மதுரை ஆதீனத்தை பதவி நீக்கம் செய்ய இந்து மக்கள் கட்சி கோரிக்கை

மதுரை: மே.6-

சென்னையில் நடைபெற்ற சைவ சமய மாநாட்டுக்குச் செல்லும் போது உளுந்தூர்பேட்டை அருகே வாகன விபத்து ஏற்பட்டதற்கு காரணம் நம்பர் பிளேட் இல்லாத குல்லா போட்ட தாடி வைத்தவர்கள் என்றும், வெகு தூரம் துரத்தி வந்து சாலைத் தடுப்பை உடைத்துவந்து எங்கள் கார் மீது மோதி விட்டு தப்பி ஓடி விட்டார்கள் என்றும் என்னை (ஆதீனத்தை) கொல்ல சதி என்றும் மதுரை ஆதீனம் பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளார். இதைக் கண்டு நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம்.

ஆனால் காவல்துறை தற்போது அந்த வாகன விபத்து நடந்த வீடியோ காட்சியை ( CCTV) வெளியிட்டுள்ளது. அந்த வீடியோவில் மதுரை ஆதீனம் வந்த வாகனமும் லேசாக உரசி உள்ளது தெரிகிறது.

இதில் ஆதீனம் வந்த வாகனம் மிக வேகமாக சென்றபோது தான் விபத்து ஏற்பட்டுள்ளது. உடனே இதனை பெரிய பிரச்சினை ஆக்கி என்னை கொல்ல தாடி வைத்த குல்லா போட்ட மத தீவிரவாதிகள் சதி திட்டமிட்டுள்ளார்கள் என்று மதுரை ஆதீன மடத்தின் புனிதத்தை கெடுக்கும் விதமாகவும், மதப் பிரச்சனையை உண்டாக்கும் விதமாகவும் , வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு பொய்யான விஷப் பேச்சை பரப்பி மக்கள் மத்தியில் மிகப்பெரிய சர்ச்சையை உண்டாக்கியுள்ளார் மதுரை ஆதீனம். இதற்காக மதுரை ஆதீனத்தை இந்து மக்கள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

‘என் வாகனத்தின் மீது இடித்தவர்கள் நேர்மையானவர்களாக இருந்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பார்கள்’ என்று கூறும் ஆதீனம், நேர்மையாக தனது வாகனத்தின் மீது மோதிய மர்ம நபர்கள் மீது காவல்துறையினரிடம் புகார் அளித்திருக்கலாமே? ஏன் புகார் அளிக்கவில்லை ? ஆதீனத்தின் பேச்சில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன.

கொலை முயற்சி குற்றச்சாட்டு கூறிய ஆதீனத்தின் மீது பல்வேறு சந்தேகங்களும் எழுகிறது. மதுரை ஆதீனம், ஒரு மதத்தின் மீது பழி போட்டு, ஒரு தவறான பொய்யான குற்றச்சாட்டை முன்வைப்பது மதுரை ஆதீன மடத்துக்கு மட்டுமல்ல திருஞானசம்பந்தர் பக்தர்களாகிய எங்களுக்கும் அவமானமாக உள்ளது.



இதற்கு முன்பாக ஆதீனத்தின் கார் ஓட்டுநர் மீதும், குத்தகை தாரர்கள் மீதும் ‘என்னை கொல்ல சதி நடக்கிறது’ என்று இதே ஆதீனம் கொலைக் குற்றச்சாட்டு கூறினாரே தவிர, அந்தக் கொலை மிரட்டல் சம்பந்தமாக யார் மீதும் இதுவரையில் முறையாக காவல்துறையிடம் புகார் அளிக்கவில்லை.

இது போன்று பொய்யான கொலை முயற்சி குற்றச்சாட்டை ஒரு மதத்தின் மீது சம்பந்தமில்லாமல் சுமத்தி குழப்பத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்துவது மதுரை ஆதீனமாக இருக்கும் அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

காவல்துறை பாதுகாப்புக்காகவோ அல்லது விளம்பர நோக்கத்துக்காகவோ மதுரை ஆதீனத்தை பின்னால் இருந்து தவறாக யாரேனும் இயக்குவது போல் தெரிகிறது. மதுரை ஆதீனத்துக்கு பின்னால் ஒரு சதிகார கூட்டமே இருக்கிறது.

கடந்த 2012 ல் நித்தியானந்தாவை 293வது ஆதீனமாக நியமிக்கும் பொழுது அதனை எதிர்த்து ஒரு வருடமாக போராடி மதுரை ஆதீனமடத்தை விட்டு நித்தியானந்தாவை கஷ்டப்பட்டு வெளியேற்றினோம்.

அதன் பிறகு 292வது சன்னிதானம் இறக்கும் பொழுது மதுரை ஆதீனமடத்துக்கு 293 வது சன்னிதானமாக இவர் தான் வரவேண்டும் என்று இந்து மக்கள் கட்சி மற்றும் இந்து அமைப்புகள் ஆதரவளித்தோம். ஆனால் மதுரை ஆதீனத்தின் நடவடிக்கைகள் சரி இல்லாத காரணத்தால் நாங்கள் மடத்துக்குச் செல்வதையே நிறுத்திவிட்டோம்.

மேலும் மதுரை ஆதீனமாக பதவியேற்ற பின்பு மதுரை ஆதீன மடத்தில் ‘தினந்தோறும் அன்னதானம்‘ போன்ற, கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றாமாலும், மின்சார சிக்கனம் என்ற பெயரில் ஆதீன மடத்தை இருளில் போடுவதும், மடத்துக்குள் யார் வருகிறார்கள், செல்கிறார்கள் என்று கண்காணிக்கும் சிசிடிவி கேமராவை அணைத்து வைப்பதும், மதுரை ஆதீனமாக பதவி நியமனம் செய்த திருவாவடுதுறை ஆதீனத்தையும், தர்மபுர ஆதீனத்தையும் கேவலமாக பேசுவதும், பிராமண சமூகத்தையும், அர்ச்சகர்களையும் இழிவு படுத்திப் பேசுவதும், மடத்துக்கு ஆசி வாங்க வரும் பக்தர்களை அவமரியாதை செய்வதும், மடத்தின் சொத்துக்களில் இருந்து வரும் வாடகை, ஒத்திக்கு இருக்கும் நபர்களிடம் பணம் வசூல் செய்வது என்றும் மதுரை ஆதீனம் செயல்படுகிறார்.

1500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான சுவாமி திருஞானசம்பந்தரால் உருவாக்கப்பட்ட மதுரை ஆதீன மடத்தின் 293வது மடாதிபதியாக இருக்கும் ஒருவர் கூறும் குற்றச்சாட்டை சாதாரணமான விஷயமாக எடுத்துக் கொள்ளாமல், வாகன விபத்து சம்பந்தமாக மதுரை ஆதீனத்தையும், அவருடன் வந்தவர்களையும், வாகனத்தை உரசிய நபர்களையும் அழைத்து உரிய முறையில் விசாரித்து உண்மை நிலையை மக்கள் மத்தியில் தமிழக காவல்துறையும், தமிழக அரசும் தெளிவுபடுத்த வேண்டும்.


சமீபகாலமாக மதுரை ஆதீன மடத்தை களங்கப்படுத்தும் விதமாகவும், மடத்தின் புனிதத்தை அவமானப்படுத்தும் விதமாகவும் அவரது நடவடிக்கைகளையும், செயல்பாடுகளையும் பார்க்கும் பொழுது மதுரை ஆதீனத்துக்கு மனநலம் பாதிக்கப்பட்டது போல் தெரிகிறது. இந்து சமய அறநிலையத்துறை சட்டப்படி மனநலம் பாதிக்கப்பட்டவரோ, குற்றச்சாட்டுக்கு உள்ளானவரோ மதுரை ஆதீனமாக இருக்க தகுதியற்றவர்.

எனவே மதுரை ஆதீன மடத்தின் நலனுக்காகவும், இந்து சமய வளர்ச்சிக்காகவும், இந்து சமயத்தை பாதுகாக்கவும், இந்து சமய ஏழை எளிய மக்களுக்கு உதவிகள் செய்வதற்காகவும் மன்னர்கள், ஜமீன்தார்கள், செல்வந்தர்கள் என தானமாக கொடுத்த சுமார் ரூ.1000 கோடிக்கு மேல் இருக்கும் மதுரை ஆதீன மடத்தின் சொத்துக்களையும், ஆதீன மடத்தின் புகழையும், புனிதத்தையும் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு மதுரை ஆதீன மரபுகளை மீறி செயல்படும் 293வது திருஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மதுரை ஆதீன மடத்தின் மடாதிபதியாக பதவி வகிக்க தகுதியற்றவர். அவரை உடனடியாக மதுரை ஆதீனம் பதவியிலிருந்து நீக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## அறிவிப்பு

சிவகங்கையை தலைமை இடமாக கொண்டு செயல்பட்டு வரும் மாலை தந்தி நாளிதழில் வேலூர் மாவட்ட செய்தியாளர் P.சசிகுமார் என்ற செய்தியாளர் நான்கு மாதத்திற்கு மேலாக நிறுவனம் விதிமுறைப்படி பணியாற்றாமல் தனது தொலைபேசியும் அணைத்து விட்டு நிறுவனத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டதின் அடிப்படையில் அவர் இன்று முதல் மாலை தந்தி நாளிதழின் மாவட்ட செய்தியாளர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். மேலும் அடையாள அட்டை ஒரு வாரத்திற்குள் அவர் சமர்ப்பிக்க வேண்டும் அவ்வாறு தவறும் பட்சத்தில் அவர் மீது மாவட்ட ஆட்சியர் , செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர், மாவட்ட கண்காணிப்பாளர் ஆகியோரிடம் புகார் தெரிவிக்கப்பட்டு அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் இச்செய்தி வாயிலாக தெரிவிக்கப்படுகிறது





## பல்லாவரத்தில் சுப்பிரமணியசாமி திருக்கோவிலில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது

பல்லாவரம் மே.6

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம் 14வது வார்டு சுந்தரேசன் தெருவில் அமைந்துள்ள சுப்பிரமணியசாமி திருக்கோவிலில் மகா கும்பாபிஷேகம் 14வது வட்டக் கழகச் செயலாளர் லயன் பி ராஜ்குமார் அவர் தலைமையில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி, 2வது மண்டலம் குழு தலைவர் பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர், 14வது வார்டு மாமன்ற உறுப்பினர் மங்கையர் திலகம் ராஜ் குமார், ஆகியோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் ஏராளமான பொதுமக்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்





### வேலூர் மேற்கு மாவட்ட இந்திய ஜனநாயக கட்சி சார்பில், 16ம் ஆண்டு விழா மற்றும் மே தின விழா முன்னிட்டு

## ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் நலதிட்ட உதவிகள் மற்றும் இனிப்புகள் வழங்கி ஐ.ஜெ.கே. சிறப்பு விழா

வேலூர் மே.06

வேலூர் மாவட்டம், வேலூர் மேற்கு மாவட்டம் இந்திய ஜனநாயக கட்சி சார்பில் மே தொழிலாளர்கள் தினம் முன்னிட்டு ஆம்பூர் சட்ட தொகுதியில், தொகுதியின் மாவட்ட தலைவர் சக்திவேல் வரவேற்பில் வேலூர் மேற்கு மாவட்டம் குடியாத்தம் தொகுதி மாவட்ட தலைவர் பாபாஜி சி ராஜன் தலைமையில் ஐஜேகே 16ம் ஆண்டு விழா, மே தினம் முன்னிட்டு ஆம்பூர் ஆதரவு அற்ற முதியோர் இல்லத்தில் இரவு உணவு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் ஆம்பூர் தொகுதி மாவட்ட செயலாளர் தினேஷ் மற்றும் தொகுதியின் நிர்வாகிகள் மகளீர் அணி செயலாளர் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு ஐ.ஜே.கே சிறப்பு விழாவை சிறப்பித்தனர்.





## ஸ்ரீபால விநாயகர், ஸ்ரீ தங்கமுத்து மாரியம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழா

தேனி. மே.6

தேனி மாவட்டம் போடி மாநகரில் தேனி ரோட்டில் உள்ள சண்மகசுந்தரபுரம் சேனைத்தலைவர் மகாஜன சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீபால விநாயகர், ஸ்ரீ தங்க முத்து மாரியம்மன் திருக்கோவில் சித்திரைத் திருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவில் மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக மாலை 6 மணிக்கு மேல் 250 க்கும் மேற்பட்டோர் முளைப்பாரி எடுத்து நகர்வலமாக ஆற்றுக்குச் சென்றனர் .அதனைத் தொடர்ந்து மாணவ மாணவியர்களுக்கு கல்வி பரிசு விழா நடைபெற்றது. இவ்விழாவில் சண்முகசுந்தரபுரம் சேனைத்தலைவர் மகாஜன சங்கம் தலைவர் .பிச்சை, செயலாளர் .அங்குவேல், பொருளாளர் . குமார், உ.ப தலைவர் .முருகேசன், உ.ப. செயலாளர் .கனிநாதன், பாலசுப்பிரமணி , அய்யனார், ஆறுமுகம், சன்னாசி , ராம்குமார் மற்றும் சேனைத்தலைவர் வாலிபர் சங்கம் சேனைத்தலைவர் மாதர் சங்கம் மற்றும் பக்த கோடிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டு திருவிழாவினை சிறப்பித்தனர்.

## தேனியில் தனியார் பள்ளி வாகனங்களை கூட்டாய்வு சிறப்பு முகாமினை ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் பார்வையிட்டு ஆய்வு






தேனி, மே.06

தேனி மாவட்டம் ஆயுதப்படை மைதானத்தில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளின் வாகனங்களை ஆய்வு செய்யும் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத் சிங், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.சிவபிரசாத், இ.கா.ப.,முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தேனி மாவட்ட நிர்வாகம், காவல்துறை,பள்ளிக்கல்வித்துறை, தீயணைப்புத்துறை, வட்டார போக்குவரத்து அலுவலகம் இணைந்து தேனி வட்டார அலுவலகத்திற்குட்பட்ட தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை ஏற்றி செல்லும் 380 பள்ளி வாகனங்களை கூட்டாய்வு செய்யும் பணிகள் நடைபெற்றது. இந்த ஆய்வின் போது, பள்ளி வாகனத்தில் அவசர காலவழி ,

முதலுதவிப்பெட்டி, ஏறி இறங்கும் படிகட்டுகள், தீயணைப்பான் கருவி, வாகனத்தின் தரை பலகை கண்காணிப்பு கேமிரா உள்புறம் மற்றும் வெளிப்புறம் ஆகியன முறையாக உள்ளதா என்றும் மேலும், வேக கட்டுப்பட்டுக்கருவி வாகனத்தின் பிரேக்கின் திறன் போன்றவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் பள்ளி வாகன ஓட்டுநர்களிடம் தெரிவித்ததாவது,

"ஆண்டுக்கு ஒருமுறை பள்ளி மாணவ, மாணவிகளை அழைத்து செல்லும் வாகனங்களை கூட்டாய்வு மூலம் ஆய்வு செய்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் உத்தரவிட்டதன் அடிப்படையில், இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பள்ளி வாகன ஓட்டுநர்கள் சீருடை அணிந்திருக்க வேண்டும். பள்ளிவாகனத்தில் ஒரு உதவியாளர் இருக்க வேண்டும். வாகனத்தின் பின்புறம் பள்ளி நிர்வாகத்தின் தொலைப்பேசி எண், வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தின் தொலைப்பேசி எண், காவல் நிலைய தொலைப்பேசி எண், குழந்தைகள் பாதுகாப்பு எண் உள்ளிட்டவை நன்றாக தெரியும் வகையில் எழுதப்பட வேண்டும்.

வாகனத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்து மீண்டும ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் "என பேசினார். மேலும், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட 287 பள்ளி வாகனங்கள் வருகின்ற 06.05.2025 அன்று கூட்டாய்வு செய்யும் பணிகள் நடைபெற உள்ளது. இவ்வாய்வில், பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத்பீடன், உதவி காவல்

கண்காணிப்பாளர் கேல்கர் சுப்பிரமணிய பாலசந்திரா, இ.கா.ப., வட்டார போக்குவரத்து அலுவலர் பெ.மாணிக்கம், மாவட்ட தீயணைப்பு அலுவலர் இரா.ஜெகதீஸ், மாவட்ட கல்வி அலுவலர் வசந்தா, மோட்டார் வாகன ஆய்வாளர்கள், மணிவண்ணன் (தேனி), சுந்தரராமன்(உத்தமபாளையம்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## தமிழக முதல்வருக்கு தேர்தல் பயம் வந்து விட்டது

### நயினார் நாகேந்திரன் விமர்சனம்

தூத்துக்குடி: மே.6-

தமிழக முதல்வருக்கு தேர்தல் பயம் வந்துவிட்டது என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார். தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: தமிழகத்தில் திமுக ஆட்சிக்கு வந்ததில் இருந்து சட்டம் ஒழுங்கு சரியில்லை. அதைப் பாதுகாப்பதில் முதல்வர் அக்கறை காட்டவில்லை. முதல்வரின் கவனம் முழுவதும், பாஜகஅதிமுக கூட்டணியை குறை சொல்வதில்தான் உள்ளது.

மாணவர்கள் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி வருகின்றனர். கிராமங்களில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. திருநெல்வேலி மாநகரில் 15 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. இதையெல்லாம் முதல்வர் கவனிக்காமல், தேர்தல் கூட்டணி பற்றியே பேசி வருகிறார். அவருக்கு தேர்தல் தோல்வி பயம் வந்துவிட்டது.

சாதி வாரி கணக்கெடுப்பு தொடர்பாக பல சர்ச்சைகள் இருந்தன. அனைத்தையும் பரிசீலனை செய்துவிட்டு, தற்போது சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய தற்போது முடிவெடுத்துள்ளது. பொதுக் கூட்டங்களிலும், சட்டப்பேரவையிலும் ஆளுநர் குறித்து தொடர்ந்து விமர்சனம் செய்துவிட்டு, தற்போது ஆளுநருடன் அதிகாரப் போட்டி இல்லை என்று தமிழக முதல்வர் கூறியுள்ளார்.

எம்எல்ஏக்கள் அனைவரும் தொகுதிக்கு சென்று வேலை பார்க்க வேண்டும் என்று முதல்வர் கூறியதற்கு, கடந்த 4 ஆண்டுகளாக யாரும் வேலை பார்க்கவில்லை என்றுதானே அர்த்தம். இவ்வாறு அவர் கூறினார்.



## பல்லாவரம் வடக்கு பகுதி தி.மு.க சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா

பல்லாவரம் மே.6

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி தி.மு.க சார்பில் பல்லாவரம் ஸ்டேஷன் ரோடு சுரங்கப்பாதை அருகில் அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தலை மண்டல தலைவர் பகுதி செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு அமைச்சர் தா.மோ அன்பரசன் கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர், நுங்கு, தர்பூசணி, கிருனி பழம், வாழைப்பழம், சாத்துக்குடி, வெள்ளரிக்காய், திராட்சைப்பழம், பாதாம் மில்க், ரோஸ் மில்க், கேழ்வரகு கூழ், கரும்பு ஜூஸ், பதநீர், போன்ற பொருட்களை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ் ஆகியோர் இணைந்து வழங்கினார்கள் மாநிலத் தகவல் தொழில் அணி துணை செயலாளர் தமிழ்மாறன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள், ரேணுகாதேவி பரமசிவம், வட்டக் கழக செயலாளர்கள் பரமசிவம், ராஜ்குமார் மற்றும் வட்ட கழக செயலாளர் மகளிர் அணி மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்



■ வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி சார்பில் சென்னை சில்க்ஸ் துணிக்கடையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு வழங்கி உறுதிமொழியை மாநகராட்சி ஆணையர் ஜானகி தலைமையில் எடுத்தனர். அருகில் தாசில்தார் வடிவேல், மண்டல சுகாதார அலுவலர் சிவக்குமார், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி, சென்னை சில்க்ஸ் மேலாளர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.






## சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புது பேருந்து நிலையம் சர்வீஸ் சாலையில் ஒட்டி கடைகள் கட்டி வருவதால், போக்குவரத்து நெரிசல் ஏற்படும் அபாயம் நிலவுகிறது

மானாமதுரை மே.6

மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் மானாமதுரை புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ளது. புது பேருந்து நிலையம் வளாகம் ஏற்கனவே இடநெருக்கடியாக உள்ளது. இந்நிலையில் பேருந்து நிலையம் முகப்பை மறைத்து வாகன காப்பகம் அமைத்துள்ளனர்.

பேருந்து நிலையம் பின்னால் உள்ள சர்வீஸ் ரோட்டில் சென்னை செல்லும் தனியார் பேருந்துகள் நின்று செல்லும்.இதற்கிடையில் மானாமதுரை நகராட்சி நிர்வாகம் சர்வீஸ் ரோடு பகுதியில் புதிதாக கட்டி வருகின்றது. இதனால் சர்வீஸ் ரோட்டில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் என மக்கள் அச்சப்படுகின்றனர். ஏற்கனவே கடைகளுக்கு வரும் வாகன ஓட்டிகள் இங்கேயே தான் வாகனங்களை நிறுத்தி செல்கின்றனர். இந்நிலையில் சர்வீஸ் ரோட்டில் புதிதாக கடைகள் கட்டினால் மேலும் நெரிசல் அதிகரிக்கும். எனவே நகராட்சி நிர்வாகம் சர்வீஸ் ரோட்டில் கடைகள் கட்டும் திட்டத்தை கைவிட வேண்டும் என்ற கேள்வி எழுந்துள்ளது.





# நாகலாபுரம் அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் திருக்கோவில் உற்சவ விழா...!

தேனி. மே.6

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நாகலாபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் திருக்கோவில் உற்சவ திருவிழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக காவடி எடுத்தும் அக்னி சட்டி ஏந்தியும் பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடனே செலுத்தினார். விழாவின் தலைவர் சபாபதி நாட்டாமை தலைமையிலும் செயலாளர் ஞானக்கண்ணு பொருளாளர் முருகேசன் தலைவர்கள் கணேசன் கிருஷ்ணமூர்த்தி ராஜு அருணாச்சலம் மற்றும் விழா கமிட்டியாளர்களும் நாகலாபுரம் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்மனின் அருளை பெற்றுச் சென்றனர்.





# பெரியகுளம் அருகே ஸ்ரீ ஜிஜி ல அல்சித் பாபாஜி மகா அவதார திருநாள்:

பெரியகுளம், மே.06

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கைலாசபட்டி கைலாசநாதர் திருக்கோவில் மலையடிவாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஜிஜி ல அல்சித் பாபாஜி சேவாஸ்ரமத்தில் ஸ்ரீ ஜிஜி லா அல்சித் பாபாஜி மகா அவதார திருநாள் சிறப்பு பூஜை மற்றும் ஆராதனையுடன் நடைபெற்றது.இந்நிகழ்வில் 5000க்கும் மேற்பட்ட சாதுக்கள் மற்றும் பக்தர்களுக்கு சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை சேவாஸ்ரமம் நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.



# கரிசல்காளம்பட்டி செல்வ விநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேக விழா

மதுரை, மே.6-

மதுரை மாவட்டம் கள்ளிக்குடி வட்டம் கரிசல்காளம்பட்டி அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில் அருள் பாலித்து வரும் ஸ்ரீ செல்வ விநாயகர் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி தக்ஷிணாமூர்த்தி துர்க்கை மற்றும் நவக்கிரகங்களுக்கு காலையில் விக்னேஸ்வர பூஜை தொடங்கி .சிவாச்சாரியார்கள் வேதங்கள் முழங்க கலசங்களில் புனித நீர் தெளிக்கப்பட்டு கும்பாபிஷேகம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அதன் பின்னர் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேக தீப ஆராதனைகள் தொடர்ந்து பக்தகோடிகளுக்கு அருட்பிரசாதம் வழங்கப்பட்டு அன்னதானம் நடைபெற்றது.. இக்கோயிலின் சிறப்பம்சமாக குழந்தை பாக்கியம் வேண்டி வரும் பக்தர்களுக்கு உடனடி தீர்வு செல்வ விநாயகர் அருளால் குழந்தை வரம் பெற்றதாகக் பக்தர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.இக் கோவிலின் பூசாரி கணேசன் நாயுடு வசந்தா பாலகிருஷ்ணன் சீதாலட்சுமி கஜேந்திரன் ஆதிலட்சுமி ஆகியோர் பராமரித்து வருகின்றனர். இவ்விழாவிற்கு பக்த கோடிகள் கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# குள்ளாய்ப்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பாலத்திலிருந்து இருசக்கர வாகனம் தவறி விழுந்து விபத்து ஏற்பட்ட இடத்தை பார்வையிட்டு மாவட்ட ஆட்சித்லைவர் ஆய்வு

திருப்பூர், மே.6-

மாவட்ட ஆட்சித்லைவர் தா.கிறிஸ்துராஜ் இ.ஆ.ப. குள்ளாய்ப்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பாலத்திலிருந்து இருசக்கர வாகனம் தவறி விழுந்து விபத்து ஏற்பட்ட இடத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

மாவட்ட ஆட்சித்லைவர் தா.கிறிஸ்துராஜ் இ.ஆ.ப. திருப்பூர் மாவட்டம், தாராபுரம்காங்கேயம் சாலை, குள்ளாய்ப்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பாலத்திலிருந்து இருசக்கர வாகனம் தவறி விழுந்து விபத்து ஏற்பட்ட இடத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சூரியநல்லூர் கிராமம், சேர்வக்காரம்பாளையத்தைச் சேர்ந்த நாகராஜ் (வயது 44) த/பெ.குழுந்தான் என்பவர் தனது மனைவி ஆனந்தி (வயது 38) மற்றும் மகள் செல்வி. தீட்சையா (வயது 12) ஆகியோருடன் நேற்று (3.5.2025) இரவு தனது இருசக்கர வாகனத்தை ஸ்டாண்டிலிருந்து எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் செல்லும் வழியில்

தாராபுரம் ஸ்ரீ காங்கேயம் சாலை, குள்ளாய்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பாலத்திலிருந்து இருசக்கர வாகனம் தவறி விழுந்த விபத்தில் நாகராஜ் மற்றும் .ஆனந்தி ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததை தொடர்ந்து. மாவட்ட ஆட்சித்லைவர் தா.கிறிஸ்துராஜ் இ.ஆ.ப. விபத்து ஏற்பட்ட பகுதியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இவ் ஆய்வின் போது. கோட்டப்பொறியாளர் (நெடுஞ் சாலைத்துறை) ராணி. தாராபுரம் வட்டாட்சியர் திரவியம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.





# புதுவயலில் தொழிலதிபர் சூ.சுப.செல்லப்பன் மங்கையற்கரசி குடும்பத்தாரால் கட்டப்பட்டுள்ள செல்லப்பன் பேலஸ் மற்றும் மங்கையற்கரசி ரெசிடென்சி திறப்பு விழா

சிவகங்கை, மே.6-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள புதுவயலில் தொழிலதிபர் சூ.சுப. செல்லப்பன் மங்கையற்கரசி குடும்பத்தாரால் கட்டப்பட்டுள்ள செல்லப்பன் பேலஸ் மற்றும் மங்கையற்கரசி ரெசிடென்சி திறப்பு விழா நடைபெற்றது.செல்லப்பன் வித்யா மந்திர் சர்வதேச பள்ளி நிர்வாக இயக்குனர் செ.சத்தியன் வரவேற்புரை ஆற்றினார். கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினார்.குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.முன்னாள் மத்திய நிதி மற்றும் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆகியோர் விழா அரங்குகளை திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர்..

எம்.பிக்கள் கார்த்தி சிதம்பரம்,என். ஆர்.இளங்கோ,முன்னாள் அமைச்சர் தென்னவன்,சட்டமன்ற உறுப்பினர்கள் மாங்குடி, முத்துராஜா, அசோக்குமார்,முன்னாள் எம்.எல்.ஏக்கள் கே.ஆர். ராமசாமி துரைராஜ்,கற்பகம் இளங்கோ, ஹெச்.ராஜா,லெட்சுமணன்,தொழிலதிபர்கள் எஸ்.ராமச்சந்திரன், படிக்காசு,காங்கிரஸ் கமிட்டி மாநில பொதுச் செயலாளர் பச்சேரி சுந்தரராஜன்,மேயர் முத்துதுரை,துணை மேயர் குணசேகரன்,த.வெ.க சிவகங்கை கிழக்கு மாவட்ட செயலாளர் டாக்டர் டி.கே.பிரபு,காரைக்குடி துணைகாவல் கண்காணிப்பாளர் பார்த்திபன்,பா.ஜ.க மாவட்ட தலைவர் பாண்டித்துரை,ஒன்றிய செயலாலர்கல் டாக்டர் கே.ஆர். ஆனந்த்,சின்னத்துரை,புதுவயல் பேரூராட்சி தலைவர் முகம்மது மீரா உள்பட அனைத்து கட்சி நிர்வாகிகள், தொழிலதிபர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.விழா ஏற்பாடுகளை செ.பாண்டியராஜன் சரவணபிரியா தம்பதியினர்,செ.சங்கரநாதன் ராஜேஸ்வரி தம்பதியினர், செ.சத்தியன் சங்கீதா தம்பதியினர் உள்பட குடும்பத்தார்கள் சிறப்பாக செய்திருந்தனர்.





# சிவகங்கை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், 12 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.04.10 இலட்சம் மதிப்பீட்டிலபல்வேறு வகையான உதவித்தொகைக்கான ஆணைகள்

சிவகங்கை, மே.6-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 380 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், அறிவுறுத்தினார்.

மேலும், தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளையொட்டி கொண்டாடப்பட்ட தமிழ் வார விழாவினை முன்னிட்டு, கடந்த 02.05.2025 மற்றும் 03.05.2025 அன்று அரசு அலுவலர்கள் / பணியாளர்களுக்களிடையே நடைபெற்ற கையெழுத்து போட்டிகள், அறிவியல் தமிழ், கணினித் தமிழ் குறித்த வினாடி வினா போட்டிகள், தலைப்பு கொடுக்கப்பட்டவுடன் யாதொரு தயாரிப்பும் இன்றி உடனடியாக பேசும் பேச்சுப் போட்டி, படத்தை அடிப்படையாக கொண்டு கதை சொல்லும் போட்டி, தமிழ் புதினங்கள் / கவிதை வாசிப்பு போட்டி, அலுவலகர்களிடையே குறிப்பு எழுதுதல் மற்றும் வரைவு எழுதுதல் போட்டி, கணினித் தமிழ் தொடர்பான போட்டிகள், தமிழ் இலக்கியங்கள் தொடர்பாக

கதை சொல்லும் போட்டிகள், தமிழ் இலக்கிய மற்றும் கலை நிகழ்ச்சிகள் போன்ற தனிநபர் மற்றும் குழு என பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு, முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றி பெற்ற மொத்தம் 59 அரசு அலுவலர்கள் / பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்ளையும், தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா நலவாரியங்களின் கீழ் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்தின் சார்பில் 07 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000/ மதிப்பீட்டில் திருமண உதவித்தொகைக்கான ஆணைகளையும் மற்றும் 05 பயனாளிகளுக்கு தலா ரூ.55,000/ மதிப்பீட்டில் இயற்கை மரண உதவித்தொகைக்கான ஆணைகளையும் என 12 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.4,10,000/ மதிப்பீட்டிலான உதவித்தொகைக்கான ஆணைகள மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) ரெங்கநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வி கீர்த்தனா மணி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜெயமணி உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ பாவேந்தன் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தமிழ் வார விழாவையொட்டி நடத்தப்பட்ட பாவேந்தன் பாரதிதாசன் குறித்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாவட்ட ஆட்சியரகத்தில் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன் தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் வே.ஜோதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆ.ஜே.செந்தில் அரசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.




# வேலூரில், பாரதிய ஜனதா கட்சி சார்பில் பஹல்காம் தாக்குதலை கண்டித்து பாஜகவினர் மாபெரும் ஆர்ப்பாட்டம்

வேலூர் மே.6-

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை, அண்ணா கலையரங்கம் அருகில், வேலூர் மாவட்ட பாரதிய ஜனதா கட்சி (பிஜேபி) சார்பில் பஹல்காம் தாக்குதலை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் தசரதன் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட முழுவதுமுள்ள பா.ஜ.க. பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் தேசபக்தி மிகு பொதுமக்கள் என சுமார் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து கண்டன கோஷங்களை எழுப்பினர்.




வேலூர் மாநகராட்சியில், சி.எம்.சி. மருத்துவமனை மற்றும் வேலூர் மாநகராட்சி பொது சுகாதாரத்துறை சார்பில்

# தூய்மை பணியாளர்களுக்கு இலவச சிறப்பு மருத்துவ முகாம்

வேலூர், மே.06

வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி மண்டலம் 1, காட்பாடி, தாராபடவேடு பேருந்து நிலையம் அருகே, நாராயண திருமண மண்டப்தில் சி.எம்.சி. மற்றும் வேலூர் மாநகராட்சி பொது சுகாதாரத்துறை இணைந்து நடத்தும் தூய்மை பணியாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமை, மாநகராட்சி ஆணையர் ஜானகி தலைமையில் நடைபெற்றது, பொது மருத்துவம், கண் மருத்துவர், பல் மருத்துவர், எலும்பு முறிவு மருத்துவர், மூட்டு வலி, கால் வலி மருத்துவர் என பலர் கலந்து கொண்டனர், இம்முகாமில் மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், மண்டல குழு தலைவர் வன்னியராஜா புஷ்பலதா, மாமன்ற உறுப்பினர்கள் மாநகர நல அலுவலர் டாக்டர்.பிரதாப், சுகாதார அலுவலர் சிவக்குமார், சுகாதார ஆய்வாளர்கள் என பலர் கலந்து கொண்டனர், மேலும், சுமார் 300க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் MCC, DBC பணியாளர்களும் முகாமில் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்பது குறிப்பிடதக்கது.



காமுகுல ஒக்கலிகர் (காப்பு) ஏந்தார் குல எரதொட்டு கோடியப்ப கும்பு பாட்டன்மார்களின் வழிவந்த தாயாதிகளுக்குப் பாத்தியப்பட்ட

# அருள்மிகு ஸ்ரீமது வீருச்சிக்கம்மாள் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா

தேனி. மே.6

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் வட்டம் சிலமலை கிராமத்தில் அமைந்துள்ள காமுகுல ஒக்கலிகர் (காப்பு) ஏந்தார்குல எரதொட்டு கோடியப்ப கும்பு பாட்டன்மார்களின் வழிவந்த தாயாதிகளுக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ மது வீருசிக்கம்மாள் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா ஞாயிற்றுக்கிழமை காலை 7:35 மணிக்கு மேல் 9.05 மணிக்குள் வெகு விமர்சையாக நடைபெற்றது. இவ்விழா யாத்ர தானம் யாகசாலை பூஜைகளுடன் சிறப்பு அலங்காரத்துடன் தீபாரதனை காட்டப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு காலை 7:00 மணி முதல் அன்னதானம் ஸ்ரீநிவாச பெருமாள் கோவில் வளாகத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தில் கோடியப்பன் . ராஜேந்திரன், தலைவர் .ராஜகுமாரன், செயலாளர் .கமலேந்திரன், பொருளாளர் .தனபாலன் மற்றும் விழா கமிட்டி உறுப்பினர்கள் ஆன கூடலூர், கம்பம் மேலசிந்தலைச்சேரி அன்னஞ்சி, காமயகவுண்டன்பட்டி, உ அம்மாபட்டி, சில்லமரத்துப்பட்டி, ஙி.தர்மத்துப்பட்டி, பூதிப்புரம் மற்றும் சிலமலை நாட்டாமை. ரவி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு விழாவில் சிறப்பித்தனர். அதுசமயம் பக்த கோடி பெருமக்களும் ஊர் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு அம்மனின் அருளை பெற்று சென்றனர்.

# காட்பாடி தெற்கு பகுதி திமுக சார்பில் முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு கால்பந்து போட்டி!

வேலூர் எம்.பி. கதிர்ஆனந்த் பங்கேற்று சிறப்புரையாற்றி வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்து, தொடங்கி வைப்பு...

காட்பாடி மே.6-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு, 7 அணி சார்பில் கால்பந்து போட்டி இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது. இதன் தொடக்க விழா காட்பாடி செயின்ட் ஜோசப் இன்ஸ்டியூட்டில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு காட்பாடி தெற்கு பகுதி செயலாளரும், மாநகராட்சி துணை மேயருமான எம்.சுனில்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட பிரதிநிதி கே.ஏ. கண்ணன், வட்ட செயலாளர் சம்மந்தம், மாநகராட்சி கவுன்சிலர்கள் ரஜினி, டீடா சரவணன், மாநகரப் பிரதி நிதி வெங்கடேசன், மகளிர் அணி சங்கீதா, நிர்வாகிகள் தீனதயாளன், செந்தில்குமார் கணேஷ், நவீன் குமார் ஆகியோர் முன்னிலை



வகித்தனர்.

வட்ட செயலாளர் சசிகுமார், வேலூர் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் சுரேஷ்குமார் ஆகியோர் வரவேற்றனர்.

சிறப்பு அழைப்பாளராக

அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாநில தலைவரும், வேலூர் எம்.பி.யுமானடி.எம்.கதிர்ஆனந்த் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி விளையாட்டு வீரர்களுக்கு வாசு தெரிவித்து, கால்பந்து போட்டிகளை தொடங்கி வைத்தார். இந்த போட்டியில் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், காஞ்சிபுரம், சென்னை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 24 கால்பந்து அணிகள் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு முதல் பரிசாக ரூ.30 ஆயிரம், 2வது பரிசாக ரூ.20 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.15 ஆயிரம் நான்காவது பரிசாக ரூ.10 ஆயிரம் வழங்கப்படுகிறது.04052025 அன்று காலை 2 வது நாள் போட்டியை வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ., தொடங்கி வைக்கிறார்.

அன்று மாலை பரிசளிப்பு விழா நடைபெறுகிறது.

சிறப்பு அழைப்பாளராக கட்சியின் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் கலந்து கொண்டு வெற்றி பெறும் அணிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார் என தெரிவித்துள்ளனர்.

# திருப்பூர் வடக்கு நெடுஞ்சாலைத்துறை நான்கு வழிச்சாலை விரிவாக்க பணி

திருப்பூர், மே.6-

திருப்பூர் நெடுஞ்சாலை வடக்கு உட்கோட்டத்திற்கு உட்பட்ட. மாநில நெடுஞ்சாலை ஆன திருப்பூர். காங்கயம் சாலை கிலோமீட்டர், 11/0.22/0. நாச்சிபாளையம் முதல் சிவன் மலை வரை அதிக வாகனங்கள் செல்லும் நெடுஞ் சாலை வழியாக கனரக வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனம் இருசக்கர வாகனங்கள் பள்ளி கல்லூரி பேருந்துகள் என அதிக போக்குவரத்து நெரிசல்களை தவிர்க்க .பொதுமக்களுக்கு எந்த இடையூறும் இல்லாமலும். வாகனங்கள் தங்கு தடை இன்றி சென்றுவர சி ஆர் ஐ டி பி .2025/26. திட்டத்தின் கீழ் நான்கு வழி பாதையாக சாலை விரிவாக்கம் செய்வதற்காக. தமிழக அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து எச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறியும் பொருட்டு நில அளவிடும் பணி மேற்கொள்ளப்பட்டு உள்ளது .அரசு ஒப்புதல் கிடைக்கப்பட்டதும் சாலை விரிவாக்க பணி உடனே துவங்கப்பட்டு. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்படும் என திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் ரத்தினசாமி. உதவி கோட்ட பொறியாளர் விஜயகுமார். இளநிலை பொறியாளர் ராஜேஷ் இவர்கள் தெரிவித்தனர்.



■ மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பொய்கரைப்பட்டி கிராம பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். இம்மனுவில் கடந்த 25 ஆண்டுகளாக இப்பகுதியில் சொந்த வீடுகள் இன்றி பொது இடங்களில் வசித்து வருகின்றோம். மேலும் பொய்கரைப்பட்டி பெரிய சின்ன சிவிலி கண்மாய் அருகில் அருகில் அரசுக்கு சொந்தமான 2.5 ஏக்கர் தரிசுநிலம் உள்ளது. இதனை சில சமூக விரோத சக்திகள் ஆக்கிரமிப்பு செய்ய முயன்று வருகின்ற சூழலில் அரசு இதனை கவனத்தில் கொண்டு வீடற்ற எங்களுக்கு அதனை வீட்டுமனை பட்டாவாக வழங்க கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.




■ தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடை பெற்ற திங்கள் கிழமை மக்கள் குறை களையும் நாள் கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், தூத்துக்குடி மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள ஸ்டார் அகாடமி டேக்வாண்டோ விளையாட்டுப் பயிற்சி மையத்தில் வீரர் வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்க ஏதுவாக டேக்வாண்டோ பயிற்சியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள எஸ்.ராம்அரவிந்த் என்பவருக்கு டேக்வாண்டோ பயிற்சியாளருக்கான தற்காலிக பணிநியமன ஆணையை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் வழங்கினார்.

# சிவபுராணம் விளக்க உரை நூல் வெளியீட்டு விழா



■ வேலூர் மாவட்டம், வேலூர், வாசகர் வட்டம், வேலூர் ஆசிரியர் இல்லத்தில் ஆசிரியர் ஞானசக்திவேலன் எழுதிய சிவபுராணம் விளக்க உரைநூல் வெளியிட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் இலவம்பாடி கவிஞர். ச.லக்குமிபதி, கவிஞர் பொன்.ராஜன்பாபு, பள்ளி தலைமை ஆசிரியர் ஜோசப் அன்னையா, சுடர் பதிப்பக உரிமையாளர் கிருஷ்ணகுமார், இம்பீரியல் பஸ் உரிமையார் ஸ்ரீதர், கவிஞர்கள் மோகன், சித்ரா, சிலம்பரசி ஆகியோர் பங்கேற்று இவ்விழாவை சிறப்பித்தனர்.

# தமிழக விவசாய தொழிலாளர்கள் கட்சி, தமிழக கட்டிட தொழிலாளர்கள் மத்திய சங்கம், தமிழக அமைப்பு சாரா மத்திய சங்கம் சார்பில் மே 1ஆம் தேதி சர்வதேச தொழிலாளர் தின விழா

நாராயணபுரம். மே.06

தென் சென்னை, சோழிங்கநல்லூர் தொகுதி, நாராயணபுரத்தில் , தமிழக விவசாய தொழிலாளர்கள் கட்சி தமிழக கட்டிட தொழிலாளர்கள் மத்திய சங்கம், தமிழக அமைப்பு சாரா மத்திய சங்கம் சார்பில் மே 1ஆம் தேதி சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு வாரிய தலைவர் திருமிகு. பொன் குமார் கலந்துகொண்டு சங்க கொடியினை ஏற்றி கேக் வெட்டி காலை உணவு வழங்கி தொழிலாளர்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் மாநில துணைத்தலைவர், மூர்த்தி, மாநில துணை பொது செயலாளர், இந்துமதி, தென் சென்னை தெற்கு மாவட்ட



தலைவர், பஞ்சாசரம், புருஷோத்தமன், துணைச் சென்னை மாவட்ட செயலாளர், செயலாளர், முரளி கிருஷ்ணன், மாவட்ட விவசாய கட்சித் தலைவர் சுப்ரமணி, துணைத்தலைவர், ஸ்ரீதர், இளைஞர் அணி தலைவர், குமரேசன், துணைத்தலைவர், செல்வன் புவனேஷ், துணைச் செயலாளர், பரத், இணைச் செயலாளர், நவநீதகிருஷ்ணன், தென் சென்னை தெற்கு மாவட்ட அமைப்புசாரா தலைவர், வரலட்சுமி, அமைப்புசாரா செயலாளர், எல். இந்துமதி, மாவட்ட தொண்டர் படை கோபி, தென் சென்னை மாவட்ட தொண்டர் படை நிர்வாகி, தினகரன், மற்றும் கிளை நிர்வாகிகள் சீனு, அசோக், ராஜ்குமார், சங்கர், மற்றும் கோவிலம்பாக்கம், காந்திநகர் , எம். ஜி.ஆர்.நகர் கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161